[1979 நவம்பர் 7

சாணார்ப்பட்டிப் பகுதியில் பாலாறு அணைத் திட்டம்.

* **வினா எண். 134—திரு. பொ. விஜயராகவன்:** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல் தாலுக்கா சாணார்ப்பட்டிப் பகுதியில் பாலாறு அணைக்கட்டு திட்டம் அரசின் பரிசிலனையிலிருக்கிறதா?

(ஆ) ஆமெனில், அத்திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் பாசன வசதி.

* **வினா எண் 135—திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலுள்ள உமையாள்புரம் ஆரியபாளையம், தமையனூர் ஆகிய ஏரிகளுக்கு வசிஸ்ட நதியிலிருந்து கால்வாய் அமைக்கும் திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இத் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) விவரங்கள் முதல்நிலை ஆய்வு முடிக்கப்பட்ட பின் தெரியவரும்.

திரு. சி. பழனிமுத்து: பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலுள்ள உமையாள்புரம் ஆரியபாளையம், தமையனூர் ஆகிய ஏரிகளுக்கு நீர் பிடிப்பு நிரம்பி பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது. அந்தக் கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்கள். அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை உடனடியாக செயல் திட்டமாகத் தீட்டி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: வசிஷ்ட நதியிலிருந்து கால்வாய் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் செயல்படுத்தப்படும்.